DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.121/2023 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | சுவாமிநாதன் |
| Father's /Husband Name | : | பரமசிவம் |
| Village | : | ஆண்டார்பந்தி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 65 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day March 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் ஆண்டார்பந்தியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி துரையை எனக்கு தெரியும். கடந்த 03.01.2023-ம் தேதி காலை 06.30 மணியளவில் டக் டக் என எனது வீட்டில் மேற்கு பகுதியில் சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்த போது அங்கு இரண்டு முகம் தெரியாத ஆட்களும், ஆஜர் எதிரியும் அங்கு இருந்தார். எங்களுக்கு சொந்தமான மண்ணை ஏன் அப்பா எடுக்குற என்னு ஆஜர் எதிரி துரையிடம் நான் கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி துரை நான் எடுப்பேன் உன்னால் என்ன செய்ய முடியும் என்றும் உன்னை வெட்டிவிடுவேன், கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். பின்னர், கட்டையால் ஆஜர் எதிரி எனது உடம்பின் அனைத்து இடங்களிலும் அடித்தார். அதில் எனது உடல் முழுவதும் வீங்கிவிட்டது. எதிரி அடிக்கும்போது உலகத்தில் இல்லாமல் உன்னை குலோஸ் பன்னிவிடுவேன் என்று சொன்னார். எதிரி அடித்ததில் எனக்கு தலையில் வலது பக்கம் காயம் ஏற்பட்டு ரத்தம் வடிந்தது. ஆஜர் எதிரி உடலில் அடித்ததில் எனக்கு உடல் முழுவதும் தடித்து போய் விட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்து சேர்ந்தேன். இதுசம்பந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி பேரளம் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் மூன்று நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனக்கு மயக்கம் எப்போது தெளிந்தது என்றால் மருத்துவமனைக்கு சென்றபோது தெளிந்தது. காவல் நிலையம் சென்றுவிட்டு மருத்துவனைக்கு சென்றேனா என்றால் இல்லை, மருத்துவமனைக்கு சென்றுவிட்டு இரண்டு மூன்று நாட்கள் கழித்து தான் காவல் நிலையம் சென்றேன். மருத்துவரிடம் நான் எத்தனை நபர்கள் அடித்ததாக கூறினேன் என்றால், ஒரு நபர் அடித்ததாக கூறினேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள ஒரு நபர் எழுதினார். எதிரிக்கும், எனக்கும் எல்லைப்பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். எதிரி

ஆண்டார்பந்தியில் வசிக்கிறார். எங்கு வேலை செய்கிறார் என்றால் சேலத்தில் வேலை செய்கிறார். எதிரி அவர் இடத்தில் வீடு கட்டி வருகிறார் என்றால் சரிதான். எங்கள் வீட்டு சந்தில் எவ்வாறு எதிரி அள்ளிய மண் அங்கு வந்தது என்றால் நாங்கள் தான் ஆற்றிலிருந்து எடுத்துக்கொண்டு வைத்திருந்தோம். வீடுகட்டுவதற்காக தோண்டிய பள்ளத்திலிருந்து எடுத்த மண்ணை எதிரி அந்த சந்தில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. எதிரி எவ்வளவு மண்ணை எடுத்துச்சென்றார் என்றால் இரண்டு டிப்பர் மண்ணை அள்ளிச்சென்றார். இரண்டு டிப்பர் மண்ணை எடுத்துச்சென்ற விபரத்தை போலிசாரிடம் சென்னேன் என்றால் சரிதான். என்னை குலோஸ் பன்னி சொல்வதாக எதிரி மிரட்டிய விபரத்தை போலிசாரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சம்பவத்தை யார் யார் பார்த்தார் என்று புகாரில் கூறியுள்ளேன் என்றால் கூறியுள்ளேன். எதிரி எனது அக்காவையும் அடித்துவிட்டார். எதிரி எனது அக்காவை அடித்த விபரத்தை புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது அக்காவும் மருத்துமவமனைக்கு வந்து சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது இருவர் நிலத்திற்கும் இடையே வேலி இருந்ததா என்றால் வேலி இருந்தது. எதிரி இருபது வருடங்களாக சேலத்தில் வேலை பார்த்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் தான் அவர் இல்லாத போது அவரது இடத்தை அபகரித்தேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே சம்பவம் இடம் தொடர்பாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஓம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.